# எல்லை நிர்ணய அறிக்கை இன்னும் ஒரு மாதத்தில் வர்த்தமானியில்.!

உள்ளூராட்சி எல்லைகள் மேன்முறையீட்டு குழுவின் அறிக்கை, இன்னும் ஒரு மாதத்தில் வர்த்தமானிப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



உள்ளூராட்சி எல்லைகள் பூரணப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளில் மிக விரைவாக தேர்தலை நடாத்துமாறு கோரி பெப்ரல் அமைப்பினால் முன்வைக்கப்பட்ட மனு, இன்று உச்ச நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே அமைச்சர் பைசர் முஸ்தபா சார்பில் ஆஜரான சட்டத்தரணி இதனை குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் தினத்தை தெரியப்படுத்துமாறு கோரியே பெப்ரல் அமைப்பு குறித்த மனுவை தாக்கல் செய்திருந்தது.

இதேவேளை, மனு மீதான அடுத்த கட்ட விசாரணை எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.